6. அறிவிப்பு

பேரவை அலுவல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று காலை கூடிய அலுவல் ஆய்வுக் குழவின் முடிவுகளுக்கு இணங்க பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு நடைபெறும் என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள் கிறேன்.

9–2–1983 (புதன்) —அரசினர் சட்ட முன்வடிவுகள்–ஆய்வு செய்தலும், நிறைவேற்றலும்.

10–2–1983 (வியாழன்) —காலை–தனியார் அலுவல்கள்.

மாலை–4.00 மணி முதல்–வறட்சி பற்றிய வெள்ளை அறிக்கை மீது விவாதம்.

11–2–1983 (வெள்ளி) —அரசினர் சட்ட முன்வடிவுகள்–ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும்.

தேவை இருப்பின் பேரவை மாலையிலும் கூடும்.

12–2–1983 (சனி) —அரசினர் சட்ட முன்வடிவுகள்–ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும்.

பேரவை வழக்கம்போல் காலை 9 மணிக்குக் கூடும்.

(பிற்பகல் 12–40)

தமிழ்நாடு சட்டப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

5. அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி)
(ஈ) கேளிக்கை வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1983.

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே. நான் கீழ்க் கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

> ''ஆளுநர் அவர்களால் 13–11–1982 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (மூன்றாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 11/1982) இப்பேரவை நிராகரிக்கிறது''

தீர்மானம் முறையே வழிமொழியப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்டத் தீர்மானத்தை மொழிகிறேன்: